பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 27 சனிக்கிழமை 15.10.2022 கதிர் 231

## அப்துல் கலாமின் பிறந்த தினம் யாழ். நூலகத்தில் இன்று நிகழ்வு



(இ.கலையமுதன்)

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் 91ஆவது பிறந்த தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இந்தியாவின் நடைபெற்றது. ☞8




# முகமாலையில் கோர விபத்து!

## - கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் 42 பேர் படுகாயம்



(ந.லோகதயாளன்)

முகமாலையில் இடம்பெற்ற கோர விபத்தில் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்கள் 42 பேர் படுகாயமடைந்தனர்.

கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ்ஸூடன் டிப்பர் வாகனம் மோதியதாலேயே இந்த விபத்து ☞2

## கனரக வாகனம் குடைசாய்ந்ததில் ஒருவர் படுகாயம்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கனரக வாகனம் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் ☞8

# ‘22’ இற்கு நிபந்தனைகளுடன் சஜித் கூட்டணியினர் ஆதரவு

## தேர்தல் மேகம் சூழ்கின்றது என்கிறார் மனோ



அரசமைப்பின் 22ஆம் திருத்தத்துக்கு நிபந்தனைகளுடன் ஆதரவு அளிக்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் கூட்டணி தீர்மானித்துள்ளது என்று தமிழ் முற்போக்குக்கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார். ☞2

## ஜே.ஆரின் வழியில் ரணில்

### அநுர சீற்றம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரின் மாமாவான ஜே.ஆரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தேர்தலைப் பிற்போடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார ☞2

## புலிகளை நான் அழிக்கவில்லை

### ரணிலின் சர்வதேச ஆலோசகர் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



இலங்கையில் போர் இடம்பெற்ற போது அந்தப் போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த விரும்பிய நான், அதன் ஓர் அங்கமாக இருப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரம ☞2


## வரகாபொல மண்சரிவில் சிக்கிய தாயும், மகனும் சடலங்களாக மீட்பு



கேகாலை, வரகாபொல பகுதியில் மண்சரிவில் சிக்குண்ட தாயும் மகனும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளன.

வரகாபொல பகுதியில் உள்ள வீடொன்றின் மீது பாரிய மண் மேடு நேற்று சரிந்து விழுந்தது. ☞2

## ரணிலைச் சந்திக்கத் தயாராகும் யாழ். வலிகாமம் வடக்கு மக்கள்



யாழ். குடாநாட்டில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பாக எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு முன்னர் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்கு 2 ஆயிரத்து ☞2

## யாழில் இளைஞர் இறந்தமைக்கான காரணம் கண்டறிவு

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் வேம்படி சந்திக்கு அண்மையில் புதிதாக அமைக்கப்படும் கட்டடத் தொகுதியில் சடலமாக மீட் கப்பட்ட இளைஞர் நிலைதடுமாறி படிக்கட்டுகளில் வீழ்ந்து தலையில் ஏற்பட்ட படுகாயம் காரணமாகவே உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் சம்பவ இடத்தில் இடம்பெற்ற ☞8

## காணாமல்போனோரின் உறவுகள் மட்டக்களப்பில் இன்று போராட்டம்

### விசாரணை இடைநிறுத்தம்



காணாமல்போனோர் அலுவலகத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் காரணமாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. ☞8

## வடக்கில் இன்று ஒரே மேசையில் எதிரெதிர் அரசியல் பிரமுகர்கள்

### கரு தலைமையில் விசேட கலந்துரையாடல்



முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் யாழ்ப்பாணத்தில் இன்று விசேட கலந்துரையாடல் ☞8

## 22 இற்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமைக்குழு கூட்டத்தில் இம்முடிவு எட்டப்பட்டது என்றும் மனோ எம்.பி. கூறினார்.

இது பற்றி ஊடகங்களிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மேலும் கூறியதாவது:-

இரட்டைக் குடியுரிமை கொண்டோர் நாடாளுமன்றத்தில் உறுப்புரிமை வகிக்க முடியாது.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைபில் உள்ளதை மாற்றி, அமெரிக்கப் பிரஜை பஸில் ராஜபக்சவின் எண்ணப்படி செயற்பட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு நாம் ஒருபோதும் இடம் தர மாட்டோம்.

பஸில் ராஜபக்ச அமெரிக்க காங்கிரஸில் இடம் தேடி கொள்ளட்டும்.

அதேவேளை, நாடாளுமன்றத்தை, அடுத்த வருட முதல் காலாண்டில் கலைக்க இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரம் தரும், 'இரண்டரை வருடம்' என்ற விதி மாற்றப்படக்கூடாது.

இந்த நாட்டு மக்கள் இன்று, இந்த நாடாளுமன்றத்தை மாற்றி, புதிய நாடாளுமன்றத்தை அமைக்க விரும்புகின்றார்கள்.

ஆகவே, இரண்டரை வருடத்தில் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் தொடர்ந்து விடப்படுவதை நாம் தந்திரோபாய நோக்கில் ஆதரிக்கின்றோம்.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் குறைந்தபட்சம் 113 உறுப்பினர்கள் கூடி நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்குச் செல்ல வேண்டும் எனத் தீர்மானித்தால், அதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறுக்க முடியாது.

அதை அவர் ஏற்று நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்குச் செல்ல தீர்மானிக்க வேண்டும் என நாம் நம்புகின்றோம்.

ஆகவே, அடுத்த வருடம் தேர்தல் மேகம் சூழும். புதிய மக்களாணையை பெற கட்சிகள் தயாராக வேண்டும்.

தேர்தலைச் சந்திக்க தமிழ் முற்போக்குக் கூட்டணி தயார் நிலையில் இருக்கின்றது. அந்நிலையை இன்னமும் மெருகூட்டும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

## முகமாலையில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது. ஏ -9 வீதியில் இன்று மதியம் இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் நோயாளர் காவு வண்டிகள் மூலம் வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களில் 14 பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும், 28 பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துக்குக் காரணமான டிப்பர் வாகனத்தின் சாரதி சம்பவ இடத்திலிருந்து தப்பியோடியுள்ளார்.

விபத்து தொடர்பில் பளைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணிலை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

500 குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கில் மயிலிட்டி மற்றும் பலாலியில் உள்ள காணிகள் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

மயிலிட்டி துறைமுகத்தை கடற்றொழில் மக்களின் வாழ்வாதாரத்துக்குப் பயன்படுத்த முடியும்.

பலாலி பிரதேசத்தை விவசாயத்தில் ஈடுபடும் குடும்பங்கள் பயன்படுத்த முடியும்.

எனினும், அந்தக் காணிகளை மீள் குடியேற்றத்துக்கு விடுவித்தால் மட்டுமே இது சாத்தியமாகும் என்று வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றத்தின் தலைவர் அருணாசலம் குணபாலசிங்கம் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் கூற்றுப்படி, 1990 இல் இலங்கை இராணுவத்தினரால் சுமார் 6 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

3 ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் உரியவர்களிடம் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் காங்கேசன்துறை, கீரிமலை, வறுத்தலவிளான் மற்றும் கட்டுவன் ஆகிய பகுதிகளில் சுமார் 500 ஏக்கர் காணிகள் இன்னமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன என்று குணபாலசிங்கம் தெரிவித்தார்.

மீதமுள்ள 3 ஆயிரம் ஏக்கர் நிலம் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்து தமது குறைகளை விளக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாக குணபாலசிங்கம் மேலும் கூறினார்.

## வரகாபொல.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்தை, தாய் மற்றும் 24 வயது மகன் ஆகியோர் மண்ணுக்குள் புதையுண்டனர். தந்தை நேற்று மாலை மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தநிலையில், தாய் மற்றும் மகனின் சடலங்கள் இன்று காலை மீட்புக்குழுவால் மீட்கப்பட்டன.

அத்துடன், இந்தக் குடும்பத்தின் இரண்டாவது மகன் (வயது 10) மேலதிக வகுப்புக்காக வீட்டிலிருந்து வெளியில் சென்றவேளையிலேயே மண்சரிவு இடம்பெற்றதால், அவர் உயிர்தப்பியுள்ளார்.

## புலிகளை.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கவின் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளைத் தான் அழித்ததாகச் சொல்வதில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் எரிக் சொல்ஹெய்ம் கூறியுள்ளார். மேலும், தீவிரவாதப் போக்குடைய தமிழ் மற்றும் சிங்களவர்களே இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மாகாணங்களுக்கு அதிகாரங் களைப் பகிர்ந்தளிப்பது குறித்து இலங்கை அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத் தியுள்ளார்.

ஆயுதப் போரின் போது உயிரிழப்பு என்பது சாத்தியமே என்றாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து மேலதிக தகவல்களை வழங்க வேண்டும் என்றும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜே.ஆரின்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திஸாநாயக்க தெரிவித்தார். தேர்தலை இழுத்தடிக்கவே சர்வஜன வாக்கெடுப்பு குறித்து கதைக்கப்படுகின்றது. இந்தத் திட்டம் வெற்றியளிக்க ஜே.வி.பி. ஒருபோதும் இடமளிக்காது எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்குக் கூட தெரிவு செய்யப்படாதவர். அவரது ஒட்டுமொத்தக் கட்சியும் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டது. அதேபோன்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள கட்சியாகும். எனவே, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை பதவி விலக வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏற்கனவே ஓராண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலை மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னதாக நடத்த வேண்டும்.

தற்போது தேர்தல் ஆணையத்துக்கு அந்த அதிகாரம் கிடைத்துள்ளது. ஆனால், தேர்தலைப் பிற்போட அரசு முயற்சிக்கின்றது. அதனால்தான் சர்வஜன வாக்கெடுப்பு பற்றிய கதை பரப்பப்படுகின்றது – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சொல்ஹெய்ம் ஒரு கேள்விக்குறி

மீண்டும் பூடகமாகக் கருத்து வெளியிடுவதன் மூலம் சர்ச்சையை ஏற்படுத்துகின்றார் நோர்வேயின் முன்னாள் அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம்.

தமது இப்போதைய இலங்கை விஜயத்தை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள இரண்டு கருத்துக்கள் நோக்கற்பாலவை.

ஒன்று – "விடுதலைப் புலிகளை நான் அழித்தேன் என்று சொல்வதில் எவ்வித உண்மையும் இல்லை. தீவிரப் போக்குடைய தமிழ் மற்றும் சிங்களவர்களே இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்" – என்ற அவரது கூற்று.

அடுத்தது – "இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த விரும்பிய நான் அதன் ஒரு பகுதியாக இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்" – என்று இப்போது அவர் கூறுவது.

விடுதலை புலிகளை சொல்ஹெய்ம் அழித்தார் என்று யாரும் சொல்லவில்லை. அப்படிக் கூறுவதற்கு மக்கள் ஒன்றும் விடயம் அறியாத அறிவிலிகள் அல்லர்.

உரிமை மீட்புக்கான யுத்தத்தில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளை – தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளை – சமாதானத்தின் மூலம் தீர்வை ஏற்படுத்தலாம் என்று நம்பிக்கை அளித்து, அந்த முயற்சிக்கு நடுநிலை – அனுசரணை – பணி வழங்குவதாக வாக்குறுதிகள் வழங்கி, பேச்சு மேசைக்கு அழைத்து வந்ததில் நோர்வேயின் – குறிப்பாக சொல்ஹெய்மின் – பங்கு பணி முக்கியமானது.

அந்த அனுசரணைப் பணியை உண்மையாக – நீதி, நேர்மையாக – நடுநிலைத் தன்மையுடன் – வெளிப்படையாக – ஆற்றாமல், மேற்குலகின் சகுனித் திட்டங்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் கரவு எண்ணத்துடன் செயல்பட்டு, புலிகளின் அழிவுக்கு வழி ஏற்படுத்தும் சதி நகர்வுக்கு அவரது தரப்பும் உடந்தையாக இருந்தது என்பதுதான் அவர் மீதான குற்றச்சாட்டு.

இலங்கை அரசும் புலிகளும் சமதரப்புகளாக அமைதிமுயற்சிகளில்ஈடுபடுவதைஉறுதிப்படுத்துவோம் என்ற நோர்வேயின் அனுசரணையை நம்பித்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக புலிகள் அந்த அமைதி முயற்சியில் குதித்தனர்.

அந்தச் சமதரப்பு பேச்சு களநிலைமையை அமெரிக்காவும் மேற்குலகும் திட்டமிட்டுக் குழப்பிய போது, உண்மை அனுசரணையாளர்களாக – நடுநிலையாளர் களாக – செயல்பட்டு, அதனை வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் அம்பலப்படுத்தி, நீதி செய்யாமல், மேற்குலகின் அந்த கரவுத் திட்டத்திற்கு இணங்கிப்போய், சர்வதேசரீதியில் புலிகளுக்கு எதிரான வலைப்பின்னலுக்கு சமாதான காலத்தில், நீதி தாண்டி, களம் அமைத்து கொடுத்தது நோர்வே.

நோர்வேயின் நடுநிலைப் பண்புகள் குறித்து தமிழருக்கு இருக்கும் மனக்கொதிப்பும் அதுதான்.

"இப்போதும் இலங்கையின் சமாதான முயற்சிகளில் பங்காளியாக இருப்பதில் மகிழ்கிறேன்." – என்கிறார் அவர். ஆனால் அது பற்றிய பகிரங்க அறிவிப்பு எதுவும் – தகவல்கள் எவையும் – தமிழ் மக்களுக்கு இல்லை.

எங்களுக்குத் தெரியாமலேயே, எங்களுக்கான சமாதான முயற்சியில் சம்பந்தப்படும் அவரின் போக்கு அவரினதும் அவரது நாட்டினதும் பழமையான கரவுத் திட்டத்தின் தொடர் அங்கம்தானா என்ற சந்தேகம் எழாமல் இல்லை.

# 200 கோடி ரூபா பெறுமதியான சுவாச மருந்துகள் காலாவதி!

## சுகாதார அமைச்சு தகவல்



நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட 200 கோடி ரூபா பெறுமதியான சுவாச நோய்களுக்கான மருந்துகள் காலாவதியாகியுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் மருந்துகள் தேவையற்றனவாகி விட்டதால், குழந்தைகளின் சுவாச நோய்களுக்காக வாங்கப்பட்ட சுவாச மருந்துகள் காலாவதியாகியுள்ளன என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொரோனா காரணமாக கை கழுவுதல் மற்றும் முகக்கவசங்கள் பாவிக்கும் பழக்கம் ஏற்பட்டதென்றும் அதன் காரணமாக அனைத்து சுவாச நோய்களும் குறைந்து விட்டன என்றும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அதிவேக நெடுஞ்சாலையின் வெலிப்பன்ன நுழைவாயில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது!



தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெலிப்பன்ன நுழைவாயில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதனால் சிறிய ரக வாகனங்கள் செல்வதற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெலிபன்ன நுழைவாயிலுக்கு அருகில் இரண்டு இடங்களில் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதேவேளை, மாற்று வழிகளை பயன்படுத்துமாறு நெடுஞ்சாலை பராமரிப்பு பிரிவு பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

இதன்படி, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கொழும்பு அல்லது காலி நோக்கி பயணிக்க விரும்பும் சாரதிகள் குருந்துகஹாஹட் அல்லது தொடங்கொட நுழைவாயிலை பயன்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது.

# நாட்டில் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு தென் மாகாணத்தில் புதிய பொலிஸ் பிரிவு

மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் இடம்பெறும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் விசேட குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக தென் மாகாணத்தில் புதிய பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

வெலிகம, மிரிஸ்ஸவில் அமைந்துள்ள மாத்தறை குற்றப் பிரிவு என்ற பெயரிடப்பட்ட புதிய பிரிவு நேற்று (வெள்ளிக்கிழமை) திறக்கப்பட்டது.

தென் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹணவின் அறிவுறுத்தலின் கீழ் இந்த பிரிவு ஸ்தாபிக்கப்படவுள்ளதுடன், மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டைக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரின் கீழ் இந்தப்பிரிவு செயற்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிலக்கரி ஏற்றிய முதலாவது கப்பல் தென்னாபிரிக்காவிலிருந்து புறப்பட்டது!

நிலக்கரி ஏற்றிய முதலாவது கப்பல் தென்னாபிரிக்காவில் இருந்து புறப்பட்டுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்படி கப்பல் எதிர்வரும் 24 அல்லது 25 ஆம் திகதி இலங்கையை வந்தடைய உள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கப்பல் 60 ஆயிரம் மெற்றிக் தொன் நிலக்கரியை ஏற்றிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 25ஆம் திகதிக்கு பின்னர் 10 நாள்களுக்குள் மேலும் மூன்று நிலக்கரி கப்பல்கள் இலங்கையை வந்தடையும் என இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்தந்த கப்பல்களில் தலா 60 ஆயிரம் மெற்றிக் தொன் நிலக்கரி கையிருப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் போதுமான நிலக்கரி கையிருப்பு நாட்டில் இருப்பதாக நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.


இதனிடையே, அவசரகால கொள்முதல் செய்வதற்கான கேள்வி கோரல் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்காக பல நிறுவனங்கள் ஏற்கனவே தமது தகவல்களை சமர்ப்பித்துள்ளன என இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நிலக்கரிச் சுரங்கத்தில் வெடிவிபத்து; துருக்கியில் 22 தொழிலாளர்கள் பலி





அங்காரா, ஒக்.15

நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட திடீர் வெடிவிபத்துச் சம்பவத்தில் 22பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. துருக்கி நாட்டின் கருங்கடல் பகுதி அருகே உள்ள பார்டின் மாகாணத்தின் அம்சரா நகரில்உள்ள நிலக்கரி சுரங்கத்திலேயே இந்த வெடிவிபத்து இடம்பெற்றுள்ளது

அந்த நிலக்கரி சுரங்கத்தில் நேற்று மாலை வழக்கம்போல தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தனர். 110க்கும் மேற்பட்டோர் சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த அந்த நிலக்கரி சுரங்கத்தில் திடீரென வெடிவிபத்துஏற்பட்டது. இந்தவெடிவிபத்தில் சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த பலரும் சிக்கிக்கொண்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் சுரங்கத்தில் சிக்கிய ஐம்பதுக்கும் மேற்பட்டோர் உயிருடன் மீட்டனர். ஆனாலும், நிலக்கரி சுரங்க வெடிவிபத்தில் சிக்கி 22 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், சுரங்கத்திற்குள் சிக்கிய எஞ்சியோரை மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன எனவும். மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பிரி. நிதியமைச்சர் திடீரென நீக்கம்: பிரதமர் டிரஸ் அதிரடி நடவடிக்கை!



லண்டன், ஒக்.15

இங்கிலாந்தின் நிதியமைச்சராக இருந்த குவாஸி குவார்டங்கை பதவியிலிருந் நீக்கியுள்ளார் எனவும், புதிய நிதியமைச்சராக வேறு ஒருவரை நியமிக்கிறார் எனவும் இங்கிலாந்துப் பிரதமர் லிஸ் டிரஸ் செய்தியாளர்களிடம்அறிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் புதிய பிரதமராக லிஸ் டிரஸ் பதவி வகித்து வருகின்ற நிலையில், இவர் கடந்த மாதம் வரி குறைப்புகளை ஆதரிக்கும் வகையில் திட்டங்களை வெளியிட்டமையுடன், கடந்த மாதம் மினி பட்ஜெட்டில் வரி குறைப்பும் அறிவிக்கப்பட்டது. கடன் வாங்கி இதைச் சரிக்கட்டலாம் என தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே, பிரதமரின் இத்திட்டத்திற்கு சொந்தக் கட்சி எம்.பி.க்கள் சிலரே அதிருப்தி தெரிவித்தமையுடன், நாட்டின் பொருளாதாரம் மோசமான நிலையில் உள்ளமையால் இம்முடிவைப் பிரதமர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்திருந்தனர். இந்தக் கருத்து பிரதமர் லிஸ் டிர சுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், இங்கிலாந்து நிதி அமைச்சர் குவாஸி குவார்டங்கை பதவியிலிருந்து அதிரடியாக நீக்கி பிரதமர் லிஸ் டிரஸ் உத்தரவிட்டமையுடன் புதிய நிதி மந்திரியாக ஜெர்மி ஹன்ட் என்பவரை நியமித்து செய்தியாளர்களுக்கு அறிமுகப் படுத்தினார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

## உக்ரைனை அழிப்பது எமது எண்ணம் அல்ல: போர் தீவிரமானால் நிலைமை பேரழிவாகும்!

### இப்படி எச்சரிக்கின்றார் ரஷ்ய அதிபர் புடின்



மாஸ்கோ, ஒக்.15

ரஷ்ய - உக்ரைன் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், உக்ரைனை அழிப்பது தங்களது நோக்கம் இல்லை என்றும், மாறாக நேட்டோ படைகளுடன் சேர்ந்து உக்ரைன் போர் தொடுக்குமாயின் மிகப்பெரிய அழிவாக அது மாறும் எனவும் தெரிவித்துள்ளார் ரஷ்ய அதிபர் புடின்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 234-வது நாள்கள் கடந்துள்ள நிலையில், இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆயுதம் உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகின்றன.

போரில் கைப்பற்றிய உக்ரைனின், நான்கு நகரங்களை ரஷ்யா தங்கள் நாட்டுடன் இணைத்துக் கொண்டது. இதனிடையே, போரில் தற்போது உக்ரைன் படைகளின் ஆதிக்கம் சற்று அதிகரித்து வருகிறது. ரஷ்ய படைகள் கைப்பற்றிய பகுதிகளை உக்ரைன் மீட்டு வருகிறது. இதனால், இரு தரப்புக்கும் இடையே மோதல் அதிகரித்து உயிரிழப்பு சம்பவங்களும் அதிகரித்து வருகின்றது. இந்தப் போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்த போதும் போரின் போக்கு 3 ஆம் உலகப்போருக்கு வழிவகுக்கும் சூழ்நிலையை உருவாக்கி வருகிறது.


இந்நிலையில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் கஜகஸ்தான் நாட்டிற்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். ரஷ்யா - மத்திய ஆசிய நாடுகள் இடையே நடைபெறும் மாநாட்டில் பங்கேற்கச் சென்றுள்ள அவர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:-

ரஷ்யா - உக்ரைன் இடையேயான உறவில் நிலவி வரும் சூழ்நிலை குறித்து கூட்டாளிகள் கவலைப்படுகின்றனர். இதில், எதிர்பாராதது எதுவும் இல்லை என்பது உண்மை. எங்களின் கண்ணோட்டம் குறித்து எங்கள் கூட்டாளிகளுக்கு நான் உரிய தகவல் கொடுத்து வருகிறேன். ஆனால், அது ரஷ்யா அதன் கூட்டாளி நாடுகளுடன் கொண்டுள்ள மதிப்பு, நட்பின் ஆழத்தை பாதிக்காது. அனைத்துப் பிரச்சினைகளையும் அமைதியான முறையில் பேச்சுவார்த்தை மூலம்

தீர்க்கவேண்டுமென இந்தியா, சீனா கூறி வருகின்றன. இந்தியாவும், சீனாவும் எங்கள் நெருங்கிய நட்பு நாடுகள், கூட்டாளிகள். அவர்களின் நிலைப்பாட்டை நாங்கள் மதிக்கிறோம். ஆனால், உக்ரைனின் நிலைப்பாட்டையும் நாங்கள் அறிவோம். அவர்கள் பேச்சுவார்த்தை வேண்டும் என கூறுகின்றனர். ஆனால், பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்பதை அதிகாரப்பூர்வ முடிவாக எடுத்துள்ளனர். உக்ரைனை அழிப்பது எங்கள் நோக்கமல்ல. ரஷ்ய இராணுவத்துடன் நேட்டோ படைகளை போரிட நேரடியாக களமிறக்குவது மிகவும் ஆபத்தான நடவடிக்கை. இது உலகளாவிய

பேரழிவுக்கு வழிவகுக்கும். இது குறித்து பேசுபவர்கள் ரஷ்ய படையுடன் நேட்டோவை நேரடியாக களமிறக்கும் முடிவை எடுக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்." - என்றார்.





## சீனாவில் சர்வாதிகாரியை அகற்ற வலியுறுத்தி பல இடங்களில் பகிரங்கமாகப் பதாகைகள்

### ஜி ஜின்பிங்ற்க்கு எதிராக வலுவடைகின்றது எதிர்ப்பு..!!

தற்போது சீன அதிபராக இருக்கின்ற ஜி ஜின்பிங்கிற்கு பதவி நீடடிப்பு கொடுக்கக்கூடாது என்பதை வலியுறுத்தியும், அவரை விலக்குமாறு கோரியும் வீதிகளில் பல பதாகைகளை வைத்து அந்நாட்டு மக்கள் எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபடுகின்றமை சீனாவில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனா அதிபர் தேர்வுக்கான பொதுக்கூட்டம் பெய்ஜிங்கில் நாளை 16ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் ஜி ஜின்பிங் தொடர்ந்து மூன்றாவது முறையாக அதிபராக தேர்ந்து எடுக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த முக்கியமான கூட்டத்தை முன்னிட்டு சீனாவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய காங்கிரஸின் கூட்டத்தில் ஜி ஜின்பிங்கிற்கு பதவி நீடிப்பு கொடுக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி வீதிகளில் பல பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன. இது ஆளும் கட்சியின் தலைவர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது. பதாகைகளை வைத்தவர்களை சீன பொலிஸார் தேடி வருகின்றனர்.ஆனால் இதுவரை அவர்களை

கண்டுபிடிக்க முடியவில்லை.

சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டத்திற்கு முன்னதாக பெய்ஜிங்கின் ஹைடியன் மாவட்டத்தின் படம் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டு வருகிறது. இதில், குறிப்பாக வீதி மேம்பாலத்தில் ஜி ஜின்பிங்கிற்கு எதிராக பதாகை தொங்கவிடப்பட்டுள்ளது.

மாண்டரின் மொழியில் எழுதப்பட்டுள்ள இந்த பதாகையில், ஜி ஜின்பிங் ஒரு சர்வாதிகாரி என்றும், அவருக்கு எதிராக பொதுமக்கள் வீதியில் இறங்கி போராட வேண்டும் என்று வேண்டுகோள்

விடுக்கப்பட்டுள்ளது.

எங்களுக்கு சீர்திருத்தம் தேவை, கலாச்சார புரட்சி அல்ல. நாம் கொரோனா பரிசோதனை செய்யாமல் சாப்பிட வேண்டும் என்பதே முக்கியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர் பரிசோதனைகள், நகரமுழுக்க ஊரடங்கு மற்றும்கடுமையான தனிமைப்படுத்தல் ஆகியவற்றிற்கு ஆதரவாக இருந்த போதிலும், 'கொவிட் ஜீரோ கொள்கையை' ஏற்றுக்கொள்வதில் சீன மக்கள் ஆர்வமாக இல்லை என்று செய்தி நிறுவனம் புளூம்பெர்க் தெரிவித்துள்ளது.

சீனாவில் பகிரங்க அரசியல் எதிர்ப்புகள் மிகவும் அரிதானவெள. எனவே,இந்தப் பதாகை எதிர்ப்பு, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. சீனாவில் ஜி ஜின்பிங் மூன்றாவது முறையாக அதிபராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பே அவருக்கு எதிராகப் போராட்டங்கள் தொடங்கியுள்ளன. தலைநகர் பெய்ஜிங்கில் பல இடங்களில் ஜின்பிங்கிற்கு எதிராக பதாகைகள் வைக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காரைக்கால் மீனவர்கள் மீது கடலில் இலங்கைத். தரப்பினர் தாக்குதலாம்!



## மீன்கள், பொருள்கள் கொள்ளையிடப்பட்டன

காரைக்கால், ஒக்.15

காரைக்கால் மீனவர்களைத் தாக்கி அவர்களிடம் இருந்த மீன்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்ச் இலங்கை மீனவர்கள் மீது காரைக்கால் பகுதி மீனவர்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

புதுவை, காரைக்கால் பகுதியில் உள்ள காரைக்கால்மேடு மீனவர் கிராமத்தை சேர்ந்த மீனவர்கள் கோடியக்கரை அருகே நேற்று இரவு நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டி ருந்தனர். அப்போது இலங்கையை சேர்ந்த கடற்கொள்ளையர்கள் அங்கு படகில் வந்த காரைக்கால் மீன வர்களை சுற்றி வளைத்தமையுடன், இரும்பு, பைப், கத்தி ஆகியவற்றால் காரைக் கால் மீனவர்கள் 7 பேரைக் கொடூரமாக தாக்கியுள்ளனர். மேலும், படகில் இருந்த இந்திய மதிப்பில் 2 லட்சம் ரூபா மதிப்பிலான மீன்கள், வலை, தொலைபேசி, திசை காட்டும் கருவி, உள்ளிட்ட பொருள்களையும் பறித்துச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் காரைக்கால் மீனவர்கள் 7 பேரும் படுகாயம் அடைந்தனர். கரைக்குத் திரும்பிய அவர்களை கிராம மக்கள் காரைக்கால் அரசு வைத்தி யசாலையில் அனுமதித்துள்ளனர். இந்த சம்பவத்தைய டுத்து அந்த பகுதியில் மீனவர்கள் ஒன்று திரண்டமை யினால் அங்கு பதற்றம் நிலவியது.

மேலும் இந்தச் சம்பவம் குறித்து மீனவர்கள் கூறுகையில் -

காரைக்கால் மீனவர்களை இலங்கை கடற்படை மற் றும் கடற்கொள்ளையர்கள் தொடர்ந்து தாக்கி வருகிறார்கள். இந்த சம்பவம் தொடர்பாக புதுவை ம ாநில அரசும், மத்திய அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் அடுத்தக்கட்ட நடவடிக்கைக்கு செல்வோம் என்று தெரிவித்துள் ளனர்.

# 2024க்குள் இந்தியா முழுவதிலும் 5ஜி சேவை அமெரிக்காவில் இந்திய நிதியமைச்சர் உறுதி



வாஷிங்டன், ஒக்.15

"எதிர்வரும் 2024 ஆம் ஆண்டுக்குள் இந்தி யா முழுவதும் 5ஜி சேவை வந்து விடும். 5ஜி சேவை இன்னும் பொதுமக்களை சென்றடைய வில்லை. இந்தியாவில் தொடங்கப்பட்ட 5ஜி சேவை முற்றிலும் தனித்துவம் மிக்கது. என்று தெரிவித்துள்ளார் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.

இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். அவர் ஜான் ஹாப்கின்ஸ் பல் கலைக்கழகத்தில் மாணவர்களுடன் உரையாடும் நிகழ்ச்சியில் பங்கேற்றார். அப்போது, சமீபத்தில் பிரதமர் மோடி தொடங்கி வைத்த 5ஜி சேவை பற்றி கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு நிர்மலா சீதாராமன் பதிலளிக்கும் போது பிரதமர் மோடி, குறிப்பிட்ட சில நகரங்களில் 5ஜி சேவையை தொடங்கி வைத்துள்ளார். 2024 ஆம் ஆண்டுக்குள் நாடு முழுவதும் 5ஜி சேவை வந்து விடும். 5ஜி சேவை இன்னும் பொதும க்களைச் சென்றடையவில்லை. இந்தியாவில் தொடங்கப்பட்ட 5ஜி சேவை முற்றிலும் தனித்துவம் மிக்கது. இதற்கான சில பாகங்கள், தென்கொரியா போன்ற நாடுகளில் இருந்து வந்தி ருக்கலாம். ஆனால் எந்த நபரிடம் இருந்தும் வரவில்லை. எனவே 5ஜி தொழில்நுட்பம், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது அல்ல. எங்களது சொந்தத் தயாரிப்பு. முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டது. என்று பதிலளித்தமையுடன், வேறு நாடுகள் விரும்பினால், அவற்றுடன் 5ஜி சேவையை பகிர்ந்து கொள்ள தயாராக இருக்கிறோம் என்றும் 5ஜி வியத்தில், இந்தியாவின் சாதனையை நினைத்து தாங்கள் பெருமைப்படுகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.



# முதல் இருந்த பா.ஜ.க வேறு இப்போது இருப்பதோ வேறு

## கூட்டணியில் இருந்து விலகிய நிதீஸ்குமார் கருத்து

பாட்னா, ஒக்.15

நான் பா.ஜனதா கூட்டணியில் இருந்து விலகி விட்டேன். இனி என் வாழ்நாளில் அக்கட்சியுடன் கைகோர்க்க மாட்டேன். எனது மீதி வாழ்நாளில், சோலிஸ்டு கட்சிகளுடன் சேர்ந்து அனைத்துத் தரப்பினரின் முன்னேற்றத்துக்காக உழைப்பேன் என்று தெரிவித்துள்ளார் பிகார் மாநில முதலமைச்சார் நிதீஸ் குமார்.

பீகார் மாநிலம் சமஷ்டிபூரில், அரசு பொறியியற் கல்லூரியின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தாவது :-

வாஜ்பாய், அத்வானி, ஜோஷி போன்ற மாபெரும் தலைவர்களின் காலத்து பா.ஜனதாவில் இருந்து தற்போதைய பா.ஜனதா வேறு பட்டது. அந்தத் தலைவர்கள் என் மீது பாசமும், மரியாதையும் வைத்திருந்தனர். தற்போதைய தலைவர்களிடம் அதைஐ பார்க்க முடியவில்லை. மேலும், சாமானியர்கள் மீது அவர்களுக்கு அக்கறை இல்லை. நான் பா.ஜனதா கூட்டணியில் இருந்து விலகி விட்டேடன். என் வாழ்நாளில் இனிமேல் அக்கட்சியுடன் கைகோர்க்க மாட்டேன். மீதி வாழ்நாளில், சோலிஸ்டு கட்சிகளுடன் சேர்ந்து அனைத்துத் தரப்பினரின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவேன். என்னுடன் கூட்டணியில் இருந்தபோது, 2017 ஆம் ஆண்டு லாலுபிரசாத் யாதவ் வீட்டில் சோதனை நடந்தது. ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவர் மீண்டும் என்னுடன் கைகோர்த்த வுடன், அரசியல் எஜமானர்கள் உத்தரவுப்படி, அவர் மீது சி.பி.ஐ. புதிய வழக்கு போட்டு துன்புறுத்துகிறது. - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# வெள்ளக்காடாகியது பெங்களூர்: வீதிகள் முடக்கம், போக்குவரத்து பாதிப்பு!

பெங்களூர் உள்பட மாநிலத்தின் பல பகுதி களிலும் - குறிப்பாக பெலகாவி, துமகூரு, தாவணகெரே, கதக், ராய்ச்சூர் உள்ளிட்ட மாவட் டங்களில் - பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில், பெங்களூரில் நேற்று இரவும் கனமழை கொட்டி தீர்த்தது. ராஜாஜிநகர், விதானசவுதா, மெஜஸ்டிக், மல்லேசுவரம், ஜெயநகர் உள்ளிட்ட பகுதி களில் இடைவிடாமல் பெய்த கனமழை காரணமாக நகரில் உள்ள பெரும்பாலான சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஆறு கள் போல ஓடுகின்றதாகத் தெரிவிக்கப்படு கின்றது. வீதிகள் தெரியாத வண்ணம் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியதால், வாகனங்கள் பயணிக்க முடியாமல் பாதிக்கப்பட்டன. அரசு, தனியார் நிறுவனங்களில் பணியாற்றி விட்டு இரவில் வேலை முடிந்து இருசக்கர வாகனங்களில் சென்ற ஊழியர்கள் மழையில் சிக்கி கொண்டு வீட்டுக்கு செல்ல முடியாமல் திண்டாடினர்.

கனமழை காரணமாக வீதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியதால் கே.ஆர்.புரம் டின்பேக்ரி முன்பாக உள்ள வீதி, விதானசவுதா சுற்றியுள்ள வீதிகள், மெஜஸ்டிக் சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. மேலும், தாழ்வான பகுதிகளில் உள்ள சில வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால், அங்கு வசித்தவர்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகினர். ராஜகால்வாய்! பகுதிகளை யொட்டி இருக்கும் வீடுகளில் வசிப்பவர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தி உள்ளது. மேலும் மழை தொடருமாயின் உயிரிழப்புகள் சம்பவிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன எனவும், ஏற்கனவே மழை காரணமாக கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

# பௌத்த - இந்து குருமார்கள் சங்கமம் கன்னொருவ தேரர்கள் கிழக்கு விஜயம்






(வி.ரி.சகாதேவராஜா)

கண்டி கன்னொருவையைச் சேர்ந்த பௌத்த தேரர்கள் தனது பக்தர்கள் சகிதம் மட்டக்களப்புக்கு நேற்று விஜயம் செய்தார்கள். மட்டக்களப்பில் உள்ள பேரின்பஞான பீடத்தில் சுவாமி ஆன்மீக ஜெகத்குரு மகாயோகி புண்ணிய ரெத்னம் குருக்களை சந்தித்து பரஸ்பரம் பக்தர்களோடு கலந்துரையாடி இறுதியில் அன்னதானத்திலும்பங்குகொண்டுவிடைபெற்றார்கள்.

மட்டக்களப்பு ரீ பேரின்ப ஞான பீடத்திற்கு கன்னொருவ ரஜமகா விகாரை விகாராதிபதி வணக்கத்திற்குரிய அம்பன்பொல ரீ சுமங்கல தேரர் பக்தர்கள் சகிதமாக விஜயம் மேற்கொண்டு பீடத்தின் குரு முதல்வர் ஆன்மீக ஜெகத்குரு மகாயோகி கே.எஸ்.புண்ணிய ரெத்தினம் சுவாமிகளை சந்தித்து இறை பிரார்த்தனை ஜெப தியான வழிபாடுகளில் ஈடுபட்டு விடை பெற்று சென்றார்கள். சந்திப்பின் போது பௌத்த, இந்து மத சமய கலாசார பாரம்பரியங்கள் பற்றியும் வணக்க வழிபாடுகள் பற்றியும் பரஸ்பரம் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. பௌத்த தேரரும் பக்தர்களும் மட்டக்களப்பு விஜயம் தொடர்பாக பரிபூரண திருப்தியும் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்தார்கள்.

# திருமலை மாவட்டத்தில் பரவலாகக் கடும் மழை

திருகோணாமலை மாவட்டத்தில் தற்பொழுது பலத்த மழை பெய்து வருகின்றது.

நேற்று பிற்பகல் 4:00 மணிக்கு பின்னர் ஆரம்பித்த மழை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக பெய்து வருகிறது.

கிண்ணியா,மூதூர்,சம்பூர், முள்ளிப் பொத்தானை, தம்மலகமம், கந்தளாய், நிலாவெளி,குச்சவெளி, வெருகல், ஈச்சலம்பற்று முதலான பகுதிகளில் மழை பெய்து வருகின்றது.

இவ்வாறு தொடர்ச்சியாக மழை பெய்து வருவதன் காரணமாக தாழ்நிலைப் பகுதிகளில் நீர் தேங்கி நிற்பதோடு அண்மையில் விதைக்கப்பட்ட வேளாண்மை வயல்களிலும் நீர் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதேவேளை மாஞ்சோலை, மாஞ்சோலை சேனை, பெரிய கிண்ணியா, சின்ன கிண்ணியா முதலான பகுதிகளில் உள்ள சில பகுதிகளில் நீர் நிறைந்து காணப்படுவதாகவும் அவவப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடல் அலைகளின் வேகம் அதிகரித்துக் காணப்படுவதனால் கடல் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மாலை நேர கடத்தொழிலுக்கு நேற்றுச் செல்லவில்லை என தெரிவிக்கின்றனர்.

# கொவிட் கால அடக்க மையத்தை பிரமுகர்கள் குழு நேரில் பார்வை




கடந்த காலங்களில் கொவிட் தொற்றுக் காரணமாக உயிரிழந்த 3,986 பேர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலக பிரிவின் ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடிக்கு நேற்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தலைமையிலான குழுவினர் விஜயம் செய்து அங்கு நிலவும் பிரச்சினைகள்சம்பந்தமாகஆராய்ந்தமையுடன், மரணித்தவர்களுக்காக துஆம் பிரார்த்தனையும் செய்தனர்.

அதன் பின்னர் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்கு சென்று அம்மையவாடியை பராமரித்து, பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதற்காக பிரதேச சபை தலைவர் ஏ.எம். நௌபரைச் சந்தித்து நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டமையுடன், அங்கு நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் கேட்டறிந்து கொண்டனர். இவ்விஜயத்தில் டொக்டர் ஏ.எம்.எம்.அஜீத், பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் உப தலைவர் ஏ.எல்.எம்.நௌபர், பிரத்தியேக செயலாளர் சதாத் கரீம் மற்றும் கட்சி முக்கியஸ்த்தர் ஏக்கூப் பாயிஸ் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

## சகா.சரவணபவனின் கைவண்ணத்தில் நாடகநூல், வன்வட்டு நாளை வெளியீடு

(பழுவூரான்)

தமிழரியல் தொலைக்காட்சிப் பணிப்பாளரும், மேனாள் மட்டக்களப்பு மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளருமான சகா.சரவணபவன் எழுதிய 'தீட்டு வீடு'– நாடகநூல் மற்றும் 'ஓம் நாதம்'– பல்திறன் வட்டு ஆகியவற்றின் வெளியீட்டு விழா எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் ஒழுங்கமைப்பில் இலங்கையின் பல்துறை மூத்த எழுத்தாளர் தமிழறிஞர் கலாநிதி அகளங்கன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு தேவநாயகம் கலையரங்கின் 'இசை இளவல்' ஜீவன் ஜோசப் அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் க.விமலநாதன், மேனாள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் செ.புண்ணியமூர்த்தி மற்றும் மேனாள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் ஆகியோரும்–

விடே அதிதிகளாக அம்பாறை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அ.அ.வாஹிட், கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்ன், மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் சி.மாமாங்கராஜா மற்றும் மட்டக்களப்பு பிராந்திய மக்கள் வங்கியின் உதவி பிராந்திய முகாமையாளர் நாகலிங்கம் அருட்செல்வன் ஆகியோரும் –

கௌரவ அதிதிகளாக கிழக்குப் பல்கலைக்கழக மேனாள் வேந்தர் வே.விவேகானந்தராசா, கிழக்குப் பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் வைத்திய நிபுணர் பேராசிரியர் க.எ.கருணாகரன், கல்முனை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி கே.முரளிதரன், கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட பீடாதிபதி தில்லைநாதன் சதானந்தன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மகப்பேற்று வைத்திய நிபுணர் பேராசிரியர் மா.திருக்குமார், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நீரிழிவு, அகஞ்சுரப்பி வைத்திய நிபுணர் திருமதி தர்சினி கருப்பையா மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் ச.சேகர் ஆகியோரும்–

சிறப்பு அதிதிகளாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசுதேவன், கோளளை மேற்கு பிரதேச செயலாளர் வெ.தவராசா, போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் இ.இராகுலநாயகி, மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம, மண்முனை தென் மேற்குப் பிரதேச செயலாளர் திருமதி தெட்சணகௌரி தினேஸ் மற்றும் மண்முனை மேற்குப் பிரதேசசபை செயலாளர் ந.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது நூலின் முதன்மைப் பிரதிகளை மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் வி.றஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்பு வர்த்தகர் சங்கத் தலைவர் தேசபந்து மு.செல்வராசா, யுனைட்டட் புத்தக நிலைய அதிபர் பா.செல்வராசா மற்றும் மட்டக்களப்பு பிராந்திய மக்கள் வங்கி காரியாலய முகாமையாளர் அ. சர்வேந்திரன் ஆகியோரும் – பல்திறன் வன்வட்டின் முதன்மைப் பிரதிகளை செங்கலடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.ஸ்ரீநாத், முன்னாள் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் க.பாஸ்கரன், மேனாள் பெரியபோரதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய தலைவர் செ.யோகராசா, ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலய வண்ணக்கர் தி.விக்ரமன், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ் வரர் ஆலய தலைவர் இ.மேகராசா மற்றும் மண்டூர் முருகன் ஆலய வண்ணக்கர் பொ. செல்வகுமார் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

# தோட்டக்காணி தனியாருக்கு வழங்குவதற்கு பாரிய எதிர்ப்பு!




தமது தோட்டப்பகுதியில் உள்ள நூறு ஏக்கர் காணி தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டி அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நாவலப்பிட்டிய போஹில், பாரண்டா தோட்டங்களில் வாழும் தொழிலாளர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) பாரண்டா தோட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரித்தான காணியே இவ்வாறு தனி நபருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பகுதியில் பல தசாப்தங்களாக வாழும் மக்களின் இருப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்

இ.தொ.காவின் உப தலைவர் பாரத் அருள்சாமியும் தொழிலாளர்களுடன் இணைந்து போராட்டத்தில் பங்கேற்றார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு –

நாம் நீதிமன்றத் தீர்ப்பை மதிப்போம். அதற்கு கட்டுப்படுவோம். 100 ஏக்கர் காணி தனியாருக்கு வழங்கப்பட்டால், அந்தத் தோட்டங்களில் வாழும் மக்களுக்கான இருப்பிடம், பாடசாலை, சிறுவர் பராமரிப்பு நிலையம், கடைகள், வணகஸ்தலங்கள் என்பவற்றுக்கு என்ன நடக்கும்? இவை தொடர்பில் இன்னும் உரிய பதிலை வழங்கவில்லை.

2005 ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பிரச்சினை ஒரு தொடர் கதையாகவே இருந்து வந்துள்ளது. ஜனவசமவின் அசமந்தபோக்கால்தான் மக்கள் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் எமது பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமானுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். மக்கள் பெருந்தோட்ட யாக்கத்தின் தலைவர் மற்றும் பெருந்தோட்ட தொழில்துறை அமைச்சர் ஆகியோருடன் இ.தொ.கா. பேச்சு நடத்தும்.

இ.தொ.கா. என்றும் மக்கள் பக்கம்தான் நிற்கும். சிலவேளை, தொழிலாளர்களுக்கு அநீ இழைக்கப்பட்டால் 250 குடும்பங்களின் சார்பிலும் ஜனவசமக்கு எதிராக நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் வழக்கு தாக்கல் செய்வதற்கும் இ.தொ.கா தயாராகவே உள்ளது. – என்றார்.

## குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கான நலன்புரி வசதிகள் விண்ணப்பிக்க இன்று இறுதிநாள்!

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான நலன்புரி வசதிகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்போர் இன்று (சனிக்கிழமை) வரை மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'எவரையும் கைவிடாதீர்கள்' என்ற தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட குறைந்த வருமானம்பெறும் குடும்பங்களுக்கான நலன்புரி வசதிகளை வழங்கும் துரித வேலைத்திட்டதில், 39 லட்சம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் நலன்புரி உதவிகளைப் பெறவுள்ளன.

கடந்த ஒக்ரோபர் 12 ஆம் திகதி வரை 23 லட்சம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

தற்போது நலன்புரித் திட்ட உதவிகளைப் பெற்றுக்கொண்டிருக்கும் அல்லது காத்திருப்புப் பட்டியலில் உள்ள 33 லட்சம் குடும்பங்களுக்கு மேலதிகமாக, 6 லட்சம் குடும்பங்கள் கொவிட் இரண்டாம் அலை மற்றும் இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி காரணமாக புதிதாக குறை வருமான நிலையை அடைந்துள்ளன என ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் நலன்புரி உதவித் திட்டத்துக்குத் தகுதியானவர்களின் பெயர்ப் பட்டியல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

## சமூக பிறழ்வுகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் யாழ். கோட்டை பகுதியில் துப்புரவுப் பணிகள்!



யாழ்ப்பாணக் கோட்டை மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் இடம்பெறும் கலாசார சீரழிவுகளை தடுக்கும் நோக்குடன் அப்பகுதியை தூய்மைப்படுத்தும் செயற்றிட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்றது.

தொல்பொருள் திணைக்களம், யாழ்.மாநகர சபை மற்றும் யாழ்.பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து முன்னெடுக்கும் இந்தச்செயற்றிட்டம் யாழ்.கோட்டை பகுதியில் நடைபெற்றது.

கோட்டை பகுதியை சூழவுள்ள பற்றைக்காடுகளைத் துப்புரவு செய்வதன் ஊடாக கோட்டைப் பகுதியில் இடம்பெறும் சமூகப் பிறழ்வான நடவக்கைகளைக் கட்டுப்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச்செயற்றிட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தினர், யாழ். மாநகர சபை உறுப் பினர்கள் மற்றும் பணியாளர்கள், யாழ்.பிரதேச செயலகப் பணியாளர்கள், சமூக மட்ட அமைப் புக்கள்,தன்னார்வ தொண்டு அமைப்புக்கள், இளையோர் அமைப்புக்கள் எனப் பலரும் இணைந்திருந்தனர்.

## கதிரவன் பட்டிமன்றப் பேரவை நூறாவது பட்டிமன்றம் நாளை



(பழுவூரான்)

கதிரவன் பட்டிமன்றப் பேரவையின் 100 ஆவது பட்டிமன்றம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.4 மணிக்கு மண் முனைப்பற்றுப் பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் மட்டக்களப்பு தமிழ்ச் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், கதிரவன் கலைக்கழகத் தாபகர் கலாபூணம் சி.தங்கராசா முன்னிலை வகிக்க, விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் சி.அமலநாதன் முதன்மை அதிதியாகவும், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்ன் சிறப்பு அதிதியாகவும், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் வி.றஞ்சிதமூர்த்தி மற்றும் மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவர் தேசபந்து மு.செல்வராசா கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது வெளியிடப்படவுள்ள பட்டிமன்ற சிறப்பு மலரை திரு. திருமதி சிவபாதசுந்தரம் வெளியிட்டு வைக்க, நூலின் முதல் பிரதியினை மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் வி.றஞ்சிதமூர்த்தி மற்றும் கருணை விழுதுகள் அமைப்பைச் சேர்ந்த அ.ஜேசுதாஸ் ஆகியோர் பெற்றுக் கொள்வர்.

கதிரவன் த.இன்பராசா தலைமையில் நடைபெறவுள்ள இப்பட்டிமன்றத்தில் 'இல்லறம் நல்லறமாவது மனைவியால்' எனும் தலைப்பில் மட்டுநகர் சிவ.வரதகரன், கவிஞர் அன்பழகன் குரூஸ் மற்றும் சோலையூரான் ஆ.தனுஸ்கரன் ஆகியோர் வாதிட, 'இல்லறம் நல்லறமாவது கணவனால்' எனும் தலைப்பில் நிலோஜினி குணசீலன், கவிஞர் அழகு.தனு மற்றும் பாலமீன்மடு இரா.கலைவேந்தன் ஆகியோர் வாதிடுகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## காணமல் போனோரின்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகள், மட்டக்களப்பு காணாமல்போனோரின் உறவினர்களிடம் விசாரணைகள் முன்னெடுத்து அவர்களுக்கான இழப்பீடுகளை வழங்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய இன்று மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் விசாரணையை நிறுத்தும் முகமாகவும், எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையிலும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பெரும் எதிர்ப்புப் பேரணியும் பிரதேச செயலக முற்றுகைப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் அம்பாறை மாவட்டத் தலைவியும், கிழக்கு மாகாண இணைப்பாளருமான தம்பிராசா செல்வராணி தலைமையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு தேர்தல் அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரதான வாயில் வரை சென்று அங்கு முற்றுகைப்போராட்டம்முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்களை ஏமாற்றும் ஜனாதிபதி செயலகத்தின் விசாரணை வேண்டாம், எங்கள் உறவுகளின் உயிருக்கு இரண்டு இலட்சம் ரூபா இலஞ்சமா?, ஆணைக்குழு விசாரணையை உடன் நிறுத்து, ஓ.எம்.பி. வேண்டாம், சர்வதேசத்தை ஏமாற்றும் அரசின் செயற்பாடுகளை உடன் நிறுத்து, பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டு கிடக்கும் அரசு எவ்வாறு இரண்டு இலட்சத்தை வழங்கப் போகின்றது போன்ற கோங்களை உறவுகள் எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவாட்ட பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உள்வாயில் மூடப்பட்டிருந்த நிலையில் பிரதான வாயிலை மூடி விசாரணை மேற்கொள்வதைத் தடுக்கும் விதமாக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து மட்டக்களப்பு பிரதான பொலிஸ் நிலையப் பொலிஸார் குறிப்பிட்ட இடம் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை ஓரப்படுத்த முற்பட்ட வேளை அங்கு வாக்குவாதம் ஏற்பட்டது.

பின்னர் பொலிஸார் விசாரணை நடத்தப்படும் மண்டபத்தினுள் சென்று விசாரணை அதிகாரிகள் சிலரை அழைத்து வந்து போராட்டம் மேற்கொள்வோருடன் கலந்துரையாடிய போது மேற்கூறப்பட்ட விசாரணையில் நம்பிக்கை இல்லை, அப்பாவித் தமிழ் மக்களை ஏமாற்ற வேண்டாம், இந்த விசாரணையை உடன் நிறுத்த வேண்டும் என்ற பலமான கோரிக்கைகளை போராட்டக்காரர்கள் முன்வைத்தனர்.

அதைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் மேற்படி விசாரணைக் குழுவினருடன் கலந்துரையாடியதையடுத்து மேற்கொள்ளப்படும் விசாரணையைஉடன்நிறுத்துவதற்குத் தீர்மானித்து காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகள் விசாரணையை இடைநிறுத்து அங்கிருந்து சென்றனர்.

அதன் பின்னர் போராட்டக்காரர்களும் இவ்வாறான விசாரணை என்ற பெயரில் மக்களை ஏமாற்றும் செயற்பாட்டை எந்த மாவட்டத்திலும் நடத்த இடமளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்து போராட்டத்தை நிறுத்தி கலைந்து சென்றனர்.

## வடக்கில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது. இதில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல முக்கிய அரசியல் தலைவர்களும் பங்கேற்றனர்.

குறிப்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான

மாவை சேனாதிராஜா, முன்னாள் வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோர் ஒரே மேசையில் அமர்ந்திருந்தனர்.

வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிரெதிர் அரசியல் தரப்பினர் ஒன்றாக இணைந்திருந்ததைப் போல் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கும் அவர்கள் ஒன்றாகப் பயணிக்க வேண்டும் என்று அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

## கனரக.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா, தவசிகுளம் பகுதியூடாகப் பயணித்துக் கொண்டிருந்த குழாய் கிணறு அடிக்கும் கனரக வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு கீழ் இறங்கி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (100)

## யாழில்.........

முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணையின் போது அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. காணொளி பதிவின் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பதிவாகிய சி.சி.ரி.வி. காணொளி பதிவை சான்றுப் பொருளாக நீதிமன்றில் முற்படுத்த உத்தரவிட்ட நீதிவான், சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்க கட்டளையிட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்த அன்னலிங்கம் கிரிசாந்தன் (வயது 38) என்ற அலுமினிய தள வேலை ஒப்பந்தக்காரரே இவ்வாறு உயிரிழந்தார்.

யாழ். நகர் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் உயிரிழந்தவரும் அவரோடு நெருக்கமுள்ள நால்வரும் மது அருந்தியுள்ளனர். அதன்போது அங்கு கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

அதில் உயிரிழந்தவருடன் சென்ற ஒருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் கட்டட வேலைத் தளத்துக்குச் சென்ற அவர் மூன்றாம் மாடியிலிருந்து நிலைதடுமாறி வீழ்ந்துள்ளார்.

படிக்கட்டுகளில் வீழ்ந்த அவர் கீழ் தளம் வரை சறுக்கி வந்து பாதுகாப்பு கம்புகள் பொருத்தப்படாததால் படிக்கட்டுகளின் வெளிப்பகுதியில் சிக்குண்டுள்ளார்.

அதன்போது அவரது தலையில் ஏற்பட்ட படுகாயம் காரணமாக அதிகளவு குருதிப் போக்கினால் உயிரிழந்துள்ளார் என்பது சம்பவ இட விசாரணையில் கண்டறியப்பட்டது.

ஹோட்டலில் இடம்பெற்ற கைகலப்பில் படுகாயமடைந்த நபரைத் தாக்கிய குற்றச்சாட்டில் 8 பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அது தொடர்பில் பிறிதொரு வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றில் அவர்கள் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் கூறினர்.

## அப்துல்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு யாழ். பொதுசன நூலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் அப்துல் கலாமின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். பொதுசன நூலக பிரதம நூலகர் மற்றும் இந்தியத் துணை தூதரக அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.10.2022இல் வெளியிடப்பெற்றது.